பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 27 ஞாயிற்றுக்கிழமை 09.02.2025 கதிர் 093

## இது ரகசியம் அல்ல!

கடந்த வருட தேர்தல் தோல்விகளைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியையும் இணைப்பது தொடர்பில் அதிகம் பேசப்பட்டது. இந்த இ-ரு கட்சிகளும் சேர்ந்தால் மட்டுமே ஜேவிபியை எதிர்கொள்ள முடியும் என்றெல்லாம் பேசப்பட்டது. இதைத் தொடர்ந்து இரு கட்சிகளையும் இணைப்பது தொடர்பான ☞ 2

# மாற்றுக்காணி என்ற பேச்சே இல்லை நிலம் மீட்க 'போயா' அன்று போராட்டம்

## தையிட்டி விகாரை காணி உரிமையாளர்கள் அறிவிப்பு

மாற்றுக்காணி என்ற பேச்சுக்கே இடமில்லை -பூர்வீக நிலத்தின் உரிமையாளர்களாகிய நாம் உரிமங்களுடன் இருக்க தையிட்டி விகாரை நிர்மாணிக்கப்பட்ட நிலப்பரப்பும், அதனை அண்டிய மக்களின் காணி நிலங்களும் விகாரைக்குரியதென்று கூறுவதை ஏற்க முடியாது என கூறியுள்ள தையிட்டி காணி உரிமையாளர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் பௌர்ணமி நாளன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தனர். இந்தச் சந்திப்பில் காணி உரிமையாளர்களான ஜெயகுமார், பாஸ்கரன், சுகுமாரி, சாருஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்கள் தெரிவித்ததாவது:

மக்களது காணி நிலங்கள் மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர அண்மையில் யாழ் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் அவர் கூறிய கருத்துக்கு முரணாக தையிட்டி ☞ 2

# 'அஸ்வெசும' சிறந்ததென ஏற்றுக்கொள்ள முடியாது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

வறுமை நிலை தொடர்பில் எவ்வித புரிதலும் இன்றி அஸ்வெசும திட்டத்தின் வெற்றி குறித்து எவ்வாறு தீர்மானிக்க முடியும்? வறுமையை ஒழிப்பதற்க ☞ 10

# 300 கோடி ரூபா மதிப்பில் டிஜிட்டல் அ.அட்டை திட்டம்

## இந்தியத் தூதர் தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சமீபத்திய இந்தியப் பயணமானது மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல்மயமாக்கலுக்கு மேலும் உத்வேகத்தை அளித்துள்ளது. அந்த வகையில் இந்திய உதவியுடன் 300 கோடி ரூபா மதிப்பிலான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்துவதை விரைவுபடுத்த ☞ 8

# சட்டமா அதிபரின் பரிந்துரை மீது அரசியல் அழுத்தங்கள் கூடாது

## சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

சட்டமா அதிபரின் பரிந்துரைகள் மீது அரசியல் ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடாதென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கு சட்டத்தரணிகள் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில், சட்டமா அதிபரின் பரிந்துரைகள் ☞ 2



# தையிட்டிப் போராட்டத்துக்கு சிறீதரன் எம்.பியும் ஆதரவு

தையிட்டி விகாரையினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமக்கு இழப்பீடு வேண்டாம் காணிகளைத் திரும்பத் தாருங்கள் என்று கேட்டு நடத்தவுள்ள போராட்டத்திற்கு ஆதரவு என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ☞ 8

# அரசியல் பழிவாங்கலுக்காக இன்னும் பலர் கைதாகலாம்

## இப்படி எதிர்வுகூறுகிறார் கம்மன்பில

அரசியல் பழிவாங்களுக்காக ஆளும்தரப்பு நீதிக்கட்டமைப்பையும் பயன்படுத்துகிறது. சட்டமா அதிபருக்கு ஆளும்தரப்பு அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகிறது. எதிர்வரும் காலங்களில் பலர் கைதாகலாம் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 2

# ஏறாவூரில் எம்.பி. மீது தாக்குதல்?

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆதரவாளர் ஒருவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்துத் தன்னைத் தாக்கினார் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் முகம்மது சாலி நழீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் முகம்மது சாலி நழீம் தெரிவித்ததாவது:

அரசியல் பிரச்சினை காரணமாக பள்ளிவாசல் ஒன்றின் முன்னால் எனது தந்தை மற்றும் சகோதரர் மீதும் நேற்று 6 மணியளவில் கலீல் என்பர் தாக்குதல் நடத்தினார்.

இதனால் காயமடைந்த சகோதரன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து காலையில் கொழும்பில் இருந்து வந்த நான் வைத்தியசாலைக்கு சென்ற நிலையில், ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி ஆதரவாளர் காதர் என்பவர் வைத்தியசாலையில் வைத்து என்னை தரக்குறைவான வார்தைகளால் பேசினார். ☞ 8

# மாகாண சபைத் தேர்தல் பற்றி கட்சிகளுடன் விரைவில் பேச்சு

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளோம். உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு திகதியை நிர்ணயிக்க முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி மன்றத் ☞ 8

# திருகோணமலையில் பட்டதாரிகள் அரச வேலை கேட்டுப் போராட்டம்

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் வேலையற்றப் பட்டதாரிகள் சங்கம் நேற்றுக் காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அரசே அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு என வலியுறுத்தி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு, வரவு செலவு திட்டத்தில் 35,000 வேலைவாய்ப்பினை பட்டதாரிகளுக்கு வழங்குவதை உறுதி செய், படித்து பட்டம் பெற்றும் பதவி இல்லை, வேலை இல்லை என்றால் பல்கலைக்கழகம் எதற்கு, வேண்டாம் வேண்டாம் போட்டி பரீட்சைகள் வேண்டாம் உள்ளிட்ட வாசகங்களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பப்பட்டு ஆர்ப்பாட்டம் ☞ 2

# வெளிநாட்டுத் தூதுவர் பதவிகளுக்கு அரசியல் நியமனம் வழங்க அதிருப்தி

## அதிகாரிகள் சங்கம் வெளிப்படுத்தியது

உலகின் முக்கிய நாடுகளுக்கான தூதர்களாக அரசியல் நியமனங்களை மேற்கொள்ளும் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகள் சங்கம் தனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை வெளிநாட்டு சேவைக்குள் அனுபவம் வாய்ந்த, தொழில்முறை வெளிநாட்டு ☞ 8

## ஆளணியை நியமிக்க அமைச்சரவை அனுமதி

# யாழ்ப்பாணத்தில் விரைவில் 'பாஸ்போர்ட்' அலுவலகம்

## பாதுகாப்பு அமைச்சர் தகவல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்தை நிறுவ ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற விழாவில் பங்கேற்ற அவர், யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகமும் 24 மணி நேரமும் திறந்திருக்கும் என்று கூறினார்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்திற்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அமைச்சரவை ஒப்புதல் கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாங்கள் இரண்டு மாதங்கள் மற்றும் ☞ 8

## இனி இது .....

பேச்சுக்கள் தொடங்கப்பட்டன. இரு தரப்புக்களில் இருந்தும் கட்சிகளின் அனுமதி பெற்றே பேச்சுக்கள் இடம்பெற்றன. ஆனால், அதுவெற்றிபெறுவதற்கானஅறிகுறிகள்எதுவும் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அதற்குக் காரணம் ரணிலின் நரிப்புத்திதான் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. கட்சிகளை இணைப்பதைவிட இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சஜித்தை மட்டம் தட்டுவதில்தான் ரணிலின் கவனம் இருக்கின்றது என்றும் சொல்கிறார்கள்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சில் இறுதிச் சந்திப்பு கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவின் வீட்டில் நடைபெற்றது. ஐ.தே.க.வால் பரிந்துரைக்கப்பட்ட குழுவும், ஐ.ம.ச.வால் பரிந்துரைக்கப்பட்ட குழுவும் இந்த விவாதங்களில் கலந்து கொண்டாலும், கலந்துரையாடலுக்கு பரிந்துரைக்கப்படாத மற்றொரு ஐ.தே.க. உறுப்பினரும் அழைக்கப்படாமல் கூட்டத்திற்கு வந்திருந்தார். அது வேறு யாருமல்லர், ஹரின் பெர்னாண்டோதான்.

ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு சஜித் வெளியேறியபோது அவரோடு கூடவே வெளியேறியவர் ஹரின். ஆனால் பின்னர் ரணிலோடு இணக்கப்பாடு கண்டு அவரது அமைச்சரவையிலும் இடம்பிடித்தவர். ரணிலின் பக்கம் சாய்ந்ததைத் தொடர்ந்து சஜித்தைக் கடுமையாகச் சாடி அறிக்கைகளை விடவும் தயக்கம் காட்டாதவர். சஜித்தின் குடும்ப உறுப்பினர்கள் மீது மட்டுமல்ல, பிரேமதாசவின் பெயரின் மீதும் ஹரின் கடுமையான தாக்குதலைத் தொடங்கினார். ரணிலின் விருப்பப்படி, சஜித்தையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் அழிக்க ஹரின் இதையெல்லாம் செய்தார்.

இறுதியில், கட்சிமாறிய குற்றத்திற்காக உச்ச நீதிமன்றம் ஹரினை நாடாளுமன்றத்திலிருந்து நீக்கியது. அமைச்சர் பதவி வகித்துபோது இலங்கை முழுவதும் இசை நிகழ்ச்சிகளை நடத்த ஹரின் கோடிக்கணக்கான ரூபாய்களை தவறாகப் பயன்படுத்தினார் எனவும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தற்போது, திசைகாட்டி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஹரினைப் போன்ற ஒருவர், தலதாவுடன் ஹர்ஷனாவின் வீட்டிற்கு வந்து பேச்சு மேசையில் அமர்ந்தமை உள்ளே பெரும் சர்ச்சையாக வெடித்துள்ளது.

ஹரினை அனுப்ப ரணிலே நடவடிக்கை எடுத்துள்ளார். விவாதத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி பெயரிட்ட குழு பலவீனமானது என்பதையும், அவர்கள் கையாளக்கூடிய ஒரு குழு என்பதையும் புரிந்துகொண்ட ரணில், சஜித்தை முடிவுக்குக் கொண்டுவர ஹரினை பேச்சு மேசைக்கு அனுப்பினார் என்று சந்தேகிக்கப்படுகின்றது. சஜித்துக்குப் பதிலாக புதிய கூட்டணியின் தலைவராக ரணிலை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது ஐக்கிய மக்கள் சக்தியை அழிக்கும் ரணிலின் சதித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்படுகின்றது.

மேலும், உள்ளாட்சித் தேர்தலின் முதல் சுற்றில் சஜித்தை நீக்கவும், இரண்டாவது சுற்றில் தொலைபேசி சின்னத்தையும் நீக்கவும் ரணில் திட்டமிடுகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பேச்சுக்கு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தவர்களை அனுப்புவதன் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இரண்டாகப் பிளவுபடுத்தி ஒவ்வொன்றாக ஐ.தே.கவிற்கு கொண்டுவர ரணில் முற்படுகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஹரினை பேச்சு மேசைக்கு ரணில் அனுப்பியதன் நோக்கமே அதுதான் என்கிறார்கள். இருந்தாலும் பிளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக, ஹரினே பேச்சுக்களை ஊத்தி மூடிவிட்டார் எனப்படுகிறது.

ஹரினின் வருகையுடன், ரணிலின் அரசியல் நோக்கம் சிதைந்து, அவரை அனுப்பியது ஐ.தே.கவுக்கே பேரழிவாக மாறியது. ஏனெனில் தமது கட்சியிலிருந்து வெளியேறிய ஹரின் பேச்சு மேசையில் அமர்வதா என்ற கடும் எதிர்ப்புணர்வு, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் அடிமட்டக் கட்சி உறுப்பினர்களிடமிருந்து கிளம்பியுள்ளது. அதே நேரத்தில், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஜித்தை சந்தித்து, ஐ.ம.ச. இப்போது திருடர்கள், மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல் நபர்கள் இல்லாத கட்சியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளதால், அத்தகைய ஊழல் குற்றச்சாட்டுகளைக் கொண்ட எவருடனும் அல்லது எந்தக் கட்சியுடனும் எந்த வகையான அரசியல் கூட்டணியையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சுட்டிக்காட்டினர்.

ஹரின் இந்தப் பேச்சுக்களில் இருந்தால் தாம் சுயாதீனமாகச் செயற்படவேண்டிவரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சஜித்திடம் தெரிவித்துள்ளனர். சஜித், இறுதியாக அவர்களுக்கு ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே கூறினார். அதாவது, ஐ.ம.சக ஒருபோதும் திருடர்களுடன் கைகோர்க்காது, வரவிருக்கும் தேர்தல்களில் தொலைபேசி சின்னத்தில் மட்டுமே போட்டியிடும்.

'நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. எஸ்.ஜே.பி-யில் சுத்தமானவர்கள் மட்டுமே உள்ளனர். ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான யாரும் எங்களிடம் இல்லை. எனவே, நாங்கள் கைகோர்த்தால், சுத்தமானவர்களுடன் மட்டுமே கைகோர்ப்போம். மேலும், எதிர்காலத்தில் எந்தத் தேர்தலிலும் தொலைபேசி சின்னத்தில் மட்டுமே போட்டியிடுவோம் ' என்று சஜித் அங்கு விளக்கினார். எனவே இந்தப் பேச்சு வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதானவையே என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாற்றுக்காணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் இருக்கின்றது.

அகில இலங்கை பௌத்த மகாசபை ஒருபடி மேல் சென்று விகாரை கட்டப்பட்ட காணி நிலம் மட்டுமல்ல, அயலில் உள்ள காணி நிலங்களும் சுவீகரிக்கப்படும் என இறுமாப்புடன் கூறியுள்ளது.

அதேநேரம் தேர்தல் கலங்களில் தேசிய மக்கள் சக்தியின் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூவரும் எம்முடன் இவ்விடயம் தொடர்பில் பேசி, கடந்த கால யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றல்லாது, கடந்த அரசுகள் போலல்லாது தாம் ஆட்சிக்கு வந்ததும் இவ்விடையம் தீர்க்கப்படும் என எமக்கு வாக்குறுதியும் வழங்கியிருந்தனர். ஆனால் இன்று இம் மூவரும் பொம்மைகள் போன்று வாய்பேசாதுள்ளனர். நாம் எமது பூர்வீக நிலங்களையே கேட்கின்றோம்.

ஆளுநர்கூட எம்முடன் பேசிய விடையத்தை வேறு திசை நோக்கி கொண்டு செல்ல முயற்சித்து தவறான அர்த்தத்துடன் ஜனாதிபதிக்குக் கூறியிருந்தார். ஆனாலும் அன்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் எமது பிரச்சினையை எடுத்திருந்தாலும் அவருக்கு பலமாக ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைக்கொடுத்திருக்கவில்லை. இது வாக்களித்த எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

இந்நிலையில் தையிட்டி விகாரை முன்பாக பெப்ரவரி 11 மாலை 4 மணியிலிருந்து மறுநாள் மாலை 6 மணிவரை எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்கவுள்ளோம். காணி உரிமையாளர்களாகிய எமது போராட்டத்துக்கு பாரபட்சமற்ற வகையில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், போக்குவரத்து மற்றும் சிற்றூர்தி, முச்சக்கர வண்டி சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டமா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அமைச்சரவையோ அரசியல் தலைமைகளோ தலையீடு செய்யக் கூடாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதன் மூலம் சட்டத்தின் சுயாதீனத்தன்மைசவாலுக்குஉட்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலைவழக்கின்மூன்றுசந்தேகநபர்களை விடுதலை செய்வது குறித்த சட்ட மா அதிபரின் பரிந்துரையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களம் விசாரணைகளின் அடிப்படையில் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியுமா இல்லையா என்பதனை நிர்ணயம் செய்வதாகத் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது முழுக்க முழுக்க சட்டத்தின் அடிப்படையிலானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் குறித்து உச்ச நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும் எனவும் இந்த விவகாரத்தில் அமைச்சரவையோ அரசியல் தலைமைகளோ தலையீடு செய்வது சட்டத்தின் நியாயதிக்கத்தை பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரின் பரிந்துரைகள் பிரபல்யமான பொது நிலைப்பாடுகளின் அடிப்படையில் அன்றி சட்டத்தின் பிரகாரம் முன்வைக்கப்படுவதாக சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# பொருளாதாரத்தை மேம்படுத்த எல்லா வழிகளிலுமே ஆதரவு

## ஜனாதிபதி அநுர உறுதியளிப்பு



இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த தேவையான அனைத்துநடவடிக்கைகளுக்கும் ஆளும்தரப்பு ஆதரவளிக்கும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் பண்டா ரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்ற 26ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளை வழங்கும் விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கும் விழா இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2023/24 நிதியாண்டிற்கான சிறந்த ஏற்றுமதியாளர்களை அங்கீகரிக்கும் விதமாக ஜனாதிபதியினால் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் மங்கள விஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு தனது உரையில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாம் பொருளாதாரரீதியில் வீழ்ச்சியடைந்திருந்தாலும், மீண்டும் எழுச்சியடைவதற்கு முயற்சிப்போம். அதற்குத் தேவையான அனைத்து தவிகளையும் அரசாங்கம் வழங்கும்.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கான அத்திவாரமாக இந்த விருதுகள் கருதப்படுகின்றன. எனவே, இலங்கையின் ஏற்றுமதித் துறையை மேலும் வலுவூட்டி உலகளாவிய சந்தையில் சிறந்த இடத்தை பிடிப்பதற்கு நாம் ஒரு கூட்டாக முயற்சி செய்வோம்.

எதிர்காலத்தில் 'அயனந ஷ்ஐ ளசடையமெய' என்ற தரத்தை உலகம் முழுவதும் கொண்டு செல்வோம். நம்பிக்கையை இழக்காமல் ஒற்றுமையாக செயற்பட்டால் மிகவும் சக்திவாய்ந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும். இலங்கையின் ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கு பல்வேறு உத்திகள் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து தொழில்துறைகளிலும் உள்ள புதிய மற்றும் பழைமையான பொருட்களை உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்த அரசாங்கம் ஆதரவளிக்கும். கைத்தொழில் துறையில் மேலும் தனித்து நிற்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளை மேற்கொள்வோம். இலங்கையின் ஏற்றுமதியாளர்களின் பங்களிப்புடன் இதனை நாம் முன்னெடுப்போம்.

எனவே, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதித் துறையை அபிவிருத்தி செய்து மீண்டும் எழுச்சி பெற அனைத்து ஏற்றுமதியாளர்களையும் நான் அழைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மற்றும் ஆளும்தரப்பின் மீதான மக்கள் நம்பிக்கை வெகுவாகச் சிதைவடைந்துள்ளது. ஆளும்தரப்பின் மீது மக்களின் வெறுப்பு தீவிரமடையும்போது மக்களின் கவனத்தை திசைத்திருப்புவதற்காக கடந்த ஆளும்தரப்புடன் தொடர்புடைய விடயங்களை ஆளும்தரப்பு வெளியிடும்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்கள், மதுபானசாலை அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் விவரத்தை ஆளும்தரப்பு வெளியிட்டது. தற்போது 2022 மே கலவரத்தின்போது வீடுகளை இழந்த அரசியல்வாதிகள் பெற்றுக்கொண்ட இழப்பீட்டுத் தொகை தொடர்பான விவரங்களை ஆளும்தரப்பு வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்ட ஆளும்தரப்பு அந்த நிதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அதேபோல் கடந்த ஆளும்தரப்பில் மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டபோதும் மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என கேள்வியெழுப்பியபோது அந்த மதுபானசாலை பத்திரங்கள் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் சட்ட சிக்கல் ஏற்படும் என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் பரப்புரை மேடைகளில் மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களையும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கொடுப்பனவை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளது. மக்களை தூண்டிவிடுவதற்காக குறிப்பிட்ட விடயங்களை சட்டத்துக்கு முரணாக செயற்படுத்த முடியாது என்பதை ஆளும்தரப்பு தற்போது விளங்கிக் கொண்டுள்ளது.

அரசியல் பழிவாங்களுக்காக ஆளும்தரப்பு நீதிக்கட்டமைப்பை பயன்படுத்திக்கொள்கிறது. அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன. சட்டமா அதிபருக்கு ஆளும்தரப்பு அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகிறது. எதிர்வரும் காலப்பகுதியில் பலர் கைதாகலாம் என்றார்.

## திருகோணமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது. இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அதிகளவான பட்டதாரிகள் பங்கு பெற்றிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# உத்தரவாத விலையில் நெல்லை உரிய காலத்தில் வாங்குங்கள்

## நாடாளுமன்றத்தில் கோடீஸ்வரன் எம்.பி. கோரிக்கை

விவசாயிகளுக்கான நெல்லின் உத்தரவாத விலையில் உரிய காலத்திலே வழங்கப்படுவதோடு, இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேச இரண்டு நெற்களஞ்சிய சாலைகளும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திடம் வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்றத்தில் கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்விலே கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தனதுரையில் -

விவசாயிகளுக்கான நெல்லின் உத்தரவாத விலையை தற்பொழுது அரசாங்கம் வெளியிட்டிருப்பதையிட்டு நான் மனமகிழ்ச்சி அடைகின்றேன். விவசாயிகளும் மகிழ்ச்சி அடைகின்றார்கள். விசேடமாக நெல்லுக்கான உத்தரவாத விலையை நீங்கள் தற்பொழுது வெளியிட்டிருக்கின்றீர்கள். அது நல்ல விடயம் இருந்தாலும் நீங்கள் இந்த விலையை ஜனவரி மாதத்தில் முதற் கிழமையிலே இந்த உத்தரவாத விலையை நிர்ணயிப்பீர்களானால் வடக்குக் கிழக்கிலே இருக்கின்ற விவசாயிகள் கூடுதலான நன்மையை பெறக்கூடிய வாய்ப்பும் சந்தர்ப்பமும் ஏற்படும்.

ஏனென்றால் வடக்குக் கிழக்கிலே விசேடமாக அம்பாறை மாவட்டத்திலே தற்பொழுது நூற்றுக்கு 60,70 வீதமான விவசாயிகள் நெல்லை அறுவடை செய்து, மிகக் குறைந்த விலையிலேதான் விற்பனை செய்திருக்கின்றார்கள். நீங்கள் கட்டுப்பாட்டு விலையைத் தற்பொழுது தான் அறிவித்திருக்கிறீர்கள். இனி வருகின்ற காலத்திலே நெல்லின் கட்டுப்பாட்டு விலையை உரிய நேரத்திலே அறிவிப்பீர்களானால், விவசாயிகள் நஸ்டத்திலே இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். விவசாயம் என்பது இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றது. விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உங்களுக்கு இருக்கின்றது. கடந்த கால அரசாங்கம் விவசாயிகளிலே விட்ட தவறின் காரணமாகத்தான் கோத்தபாய அரசாங்கமானது இந்த நாட்டை விட்டு வெளியேறி இருந்தது.

ஆகவே தயவு செய்து நீங்கள் உரிய நேரத்திலே அந்த விலையை நிர்ணயிங்கள். நீங்கள் தற்பொழுது 120, 125, 130 ரூபாக்களாக நீங்கள் நெல்லின் விலையைதீர்மானித்திருக்கிறீர்கள். அது உண்மையாக விவசாயிகளுக்கு உத்தரவாத விலை என்பது காணாத ஒரு பெறுமதியாகும். ஏனென்றால் விவசாயிகளுக்கான செலவானது மிகக் கூடுதலாக இருக்கின்றது.

இந்த விலையை இனி வருகின்ற காலத்திலாவது சுமார் 140 ரூபா விலையிலே கிடைக்கும் என்றால் விவசாயிகள் தங்களை காத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை இந்த இடத்திலேயே தெளிவாகக் கூற விரும்புகின்றேன்.

ஏனென்றால், கடந்த காலம் தொட்டு, விவசாயிகளுக்கான உத்தரவாத விலைகள் பெப்ரவரி மாதத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் இனி வருகின்ற காலத்தில் நீங்கள் அதனை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

தற்பொழுது கூட, விவசாயிகள் நெல்லை அறுவடை செய்த பின்னர் தான் பசளைகள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றது.

ஆகவே பசளைகளை நீங்கள் உரிய காலத்திலேயே கொடுக்கின்றபொழுது தான் அவர்கள் உச்ச விளைச்சலை, உச்ச இலாபத்தை அடையக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

விசேடமாக ஆலையடிவேம்பு பிரதேசத்திலே இரண்டு நெற்களஞ்சியசாலைகள் இருக்கின்றன. அது பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்குரிய நெற்களஞ்சிய சாலையாக இருக்கின்றது.

இந்த நெற்களஞ்சியசாலை 1969 ஆம் ஆண்டிலே இருந்து ஆலையடிவேம்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பராமரித்து வந்தது. ஆனால் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் யுத்தம் உச்சநிலையிலே இருந்த பொழுது இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அதன் பிறகு அமைச்சானது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இராணுவத்தின் தலைமை அதிகாரிகளாலே அது 2010 ஆம் ஆண்டு, ஆலையடிவேம்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு அந்த காணி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது மீண்டும் இராணுவமானது பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எந்தவித அனுமதியும் இன்றி, அவர்களின் அந்த கூட்டத் தீர்மானம் இன்றி, அவர்களின் அங்கத்தவர்களின் அனுமதி இன்றி, பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் இயக்குனர் சபைகளின் அனுமதியின்றி வலுக்கட்டாயமாக தற்பொழுது தங்களது கட்டுப்பாட்டில் இரண்டு நெற்களஞ்சிய சாலைகளையும் எடுத்து இருக்கின்றார்கள். இந்த பல்நோக்கு கூட்டுறவு சங்கமானது அந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு நெல்லை கட்டுப்பாட்டு விலையிலே அவர்கள் கொள்வனவு செய்து அதனை அரிசியாக உற்பத்தி செய்து குறைந்த விலையிலே மக்களுக்கு வழங்கியிருந்தார்கள். ஆனால் இராணுவத்தினர் இப்போது அதனை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதனை அமைச்சர் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அவர்கள் அனுமதி இல்லாமல் இந்த விடயத்தை செய்திருக்கின்றார்கள். இது அந்தப் பிரதேசத்தின் மக்களுக்குரிய இலட்சக்கணக்கான பெறுமதியான சொத்தாகும்.

பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கூடுதலான பணத்தை செலவழித்து தான் அதனை இயக்கி வந்தார்கள். தயவுசெய்து அதை கருத்தில் கொள்ளுங்கள். நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்து மீண்டும் அந்த பல நோக்கு கூட்டுறவு சங்கத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். - என்றும் கூறினார்.

# மட்டு. வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

வேலையற்ற பட்டதாரிகள் அரச நியமனங்கள் கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அழைப்பினையடுத்து, காந்தி பூங்காவில் ஒன்றிணைந்த வேலையில்லா பட்டதாரிகள், 'அரச நியமனத்தினை உறதிப்படுத்து'; 'காட்டாதே காட்டாதே பாரபட்சம் காட்டாதே'; 'அழிக்காதே அழிக்காதே எங்களது கனவுகளை அழிக்காதே'; 'வயது ஏறுது வாழ்க்கை போகுது வேலைவேண்டும்' போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டதில் சுமார் ஒரு மணித்தியாலம் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 2000 இற்கும் மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் உள்ளபோதிலும் அவர்களுக்கான நியமனங்கள் குறித்து இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைனவும் பல்வேறு கனவுகளுடன் பல கஷ்டங்களுக்கு மத்தியில் பட்டப்படிப்புகளை முடித்துள்ளபோதிலும், இதுவரை தமது வேலைவாய்ப்புகள் உறுதிப்படுத்தப்படவில்லை போன்றவை இதன்போது பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, அங்கிருந்து பழைய கச்சேரியில் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்த பின்னர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.





ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள்

# கிண்ணியா அல் மினாவுக்கு வித்திக்கு கற்றலுக்கான வளங்கள் கையளிப்பு

(ஹலால்தீன்)



கிண்ணியாஅல்மினாமகாவித்தியாலயத்தின் கற்றல் கற்பித்தலுக்கு தேவையான பௌதிகவளங்கள் வெள்ளிக்கிழமை மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் முகம்மட் யூசுப் ஹதியத்துள்ளாஹ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாபா, இஸட்.எம்.எம்.நளீம், கௌரவ விருந்தினராக முஸ்லிம் எய்ட் நிறுவனப் பணிப்பாளர், ஜனாப், ஏ.சி . பைஸர்கான்,விஷேட விருந்தினர்களாக, ஜனாப், முனீர் முஸ்தபா, ஜனாப், வு. சலீம், பிரதி அதிபர் அப்துல் கபூர் முஹம்மது இம்தியாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்எய்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் மூன்று செயற்றிட்ங்கள் இப் பாடசாலைக்கு வழங்கப்பட்டன. பௌதீகவள அபிவிருத்திமனிதவள அபிவிருத்தி,கல்வி அபிவிருத்தி,இவற்றில் பௌதீக வள அபிவிருத்தி செயற்றிட்டங்களாக மாணவர்களின் பாவனைக்காக இன்று கையளிக்கப்பட்டன. புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம், புனரமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடம், குடிநீர் விநியோகம், புதிய மல சல கூடத் தொகுதி,வகுப்பறைத் தளபாடங்கள் என்பன கையடிக்கப்பட்டன.

இதேவேளை மனித வள அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பனவற்றுடன். மூன்றாவது செயற்றிட்டமாககல்வி அபிவிருத்திசெயற்றிட்டங்கள் மிக விரைவில் கையளிக்கப்பட உள்ளன.

இச் செயற்றிட்டங்களுக்கு உதவி செய்த முஸ்லிம் எய்ட் நிறுவனத்திற்கு தமது நன்றிகளை பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துக் கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விழிப்போடு இருப்போம் சுகத்தோடு வாழ்வோம்

டெங்குவுக்கு காரணமான அதே நுளம்புகளால் பரவும் வைரஸ் காய்ச்சலான சிக்குன்குனியா, தற்போது பரவும் அபாயத்தில் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது,

கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா, இந்த தொற்றுநோயைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

'சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் டெங்குவைப் போலவே அதிக காய்ச்சல், மூட்டு வலி மற்றும் உடலில் தடிப்புகள் ஏற்படுகின்றன,' என்று மருத்துவர் பெரேரா விளக்கினார். இருப்பினும் இந்தக் காய்ச்சலின்போது ஏற்படும் மூட்டு வலி மிக மோசமான என்பது அனுபரீதியலானது. கை, கால் விரல்களின் மூட்டுக்களில் அதிக வலியைக் கொடுக்கும் இது. குணமடைய போதுமான ஓய்வு எடுக்கப்படவேண்டியது அவசியம் என்கிறார் மருத்துவர். இந்த திநுண்மியினால் பாதிக்கப்பட்ட வயதான நபர்கள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் மூட்டு வலியால் பாதிக்கப்படலாம் என்பதையும் மருத்துவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி வீட்டையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக நீர் தேங்காத வகையில் வைத்துக்கொள்வதுதான். பொதுமக்கள் விழிப்புணர்வோடு செயற்படவேண்டியது முக்கியம். சுகாதாரச் சீர்கேடுகள் அபாயத்தை வருந்தி அழைக்கும்.

'டெங்கு நுளம்பு சிக்குன்குனியா பாதித்த நோயாளியைக் கடித்த பின்னர் மற்றொரு நபரைக் கடிக்கும்போது சிக்குன்குனியா அவருக்கும் பரவும் ஆபத்து அதிகரிக்கிறது' என்று மருத்துவர் பெரேரா எச்சரித்தார்.

இந்த கொசுவால் பரவும் நோய் மேலும் பரவுவதைத் தடுக்க, தேங்கி நிற்கும் நீர் ஆதாரங்களை அகற்றுவதில் விரைவாகச் செயல்படுமாறு சுகாதார அதிகாரிகள் சமூகத்தை தொடர்ந்து வலியுறுத்துகின்றனர். எனினும் பலரும் அதில் அக்கறையற்ற இருப்பதையும் காணமுடிகின்றது. நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டபோதும்கூட தமது சுற்றுப்புறத்தை தூய்மையாக்காமல் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கின்றது. அதனாலேயே டெங்கு நோயின் தாக்கமும் அதிகமாக இருக்கிறது. எனவே சிக்குன்குனியா நோய்க்கு ஆளாகாமல் இருக்கும் வகையில் விழிப்புணர்வோடு ஒவ்வொருவரும் நடந்துகொள்வோம்.

# அதிபர் பொறுப்பேற்பு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது கமுஃகமுஃமல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபராக அதிபர் சேவை ஒன்றை சேர்ந்த எம்.சி. நஸ்லின் ரிப்கா அன்சார் வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் மீண்டும் பொறுப்பேற்றார்.

சாய்ந்தமருது கமுஃகமுஃ மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய புதிய அதிபராக நியமிக்கப்பட்ட அதிபர் சேவை ஒன்றை சேர்ந்த எம்.சி. நஸ்லின் ரிப்கா அன்சார் வெள்ளிக்கிழமை பாடசாலை பிரதி அதிபர் இடமிருந்து சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியும், கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளருமான ஏ. அஸ்மா மலிக் முன்னிலையில் பாடசாலையில் கடமையேற்றார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.எம். அன்ஸார், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை அம்பாறை மாவட்ட முன்னாள் தலைவர் எஸ்.எச். ஆதம்பாவா, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல். அன்ஸார், சாய்ந்தமருது முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி, சாய்ந்தமருது கமுஃகமுஃஅல்- ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர் யூ.எல்.என்.ஹுதா, சாய்ந்தமருது கமுஃகமுஃஅல்- ஹிலால் வித்தியாலய பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத், கமுஃகமுஃ மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய பிரதி அதிபர், ஆசிரியர்கள், கமுஃகமுஃ மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கற்றாழை கன்றுகள் வழங்கி வைத்தல்

(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட அன்னையர் ஆதரவு குழுவினருக்கான கற்றாழை கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி ஷகீலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கு அமைவாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வானது இயற்கை வேளாண்மை வழிமுறையை பரப்புவதை இலக்காக கொண்டு நடைபெற்றது.

மேலும் இந்தக் கற்றாழைக் கன்றுகளை அன்னையர் ஆதரவு குழு உறுப்பினர்கள் தங்கள் வீடுகளில் நட்டு பாதுகாக்க வேண்டும் என்பதுடன் கற்றாழை வளர்ப்பு முறைகள், நீர் பாதுகாப்பு மற்றும் உரமளிப்பு தொடர்பான அறிவுரைகளும் இயற்கை விவசாய தோட்டம் பிறைவேட் அமைப்பின் உறுப்பினர்களால் ஒவ்வொரு அன்னையர் ஆதரவுக் குழுவுக்கு பொறுப்பான பொதுச்



சுகாதார மருத்துவ மாதுக்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் இந்தக் கற்றாழைக் கன்றுகள் அன்னையர் ஆதரவு குழுவின் உறுப்பினர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் அன்னையர் ஆதரவு குழு பிரிவுக்கு பொறுப்பான அனைத்து பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் கலந்து கொண்டு கன்றுகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# போதைப் பொருள் ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வு சம்மாந்துறையில்

(இல்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை போதைப் பொருள் ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு மற்றும் தெளிவூட்டல் நிகழ்வு சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது, சமூகத்தில் போதைப்பொருள்பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி மக்களிடம் விழிப்புணர்வு மற்றும் தெளிவூட்டல் ஏற்படுத்தும் வகையில் சிறு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் என சந்தேகிக்கப்படும் சிலரின் வீடுகளுக்கும் சென்று பொலிஸாரால்



கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை பொலிஸார், கிராம உத்தியோகத்தர், கோவில் நிர்வாக உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கேரளக் கஞ்சாவுடன் மூவர் கைதாகினர்

(றிபாஸ்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் கே.எல்.எம்.முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்கு சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 110 மில்லி கிராம் கேரள கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களிருந்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட ஒரு நபரிடமிருந்து 1050 மில்லி கிராம் கஞ்சாவும், மற்றைய நபரிடமிருந்து 500 மில்லி கிராம் கஞ்சாவும் பொலிஸார் கைப்பற்றப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறிலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிய விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### கிளிநொச்சி பொழுதுபோக்கு மையத்தில்

# ராணுவத்தை தாக்கிய குற்றச்சாட்டில் 9 பேர் கைதுசெய்யப்பட்டு மறியல்

கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரால் புணரமைக்கப்பட்ட பொழுதுபோக்கு மையத்தில் கடந்த வியாழக்கிழமை இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை சமரசம் செய்ய முற்பட்ட இராணுவ உத்தியோகத்தர் மீது கண்மூடித்தனமாக தாக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சிவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவத்தின்தொடர்புடையஒன்பது சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்து வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை சந்தேக நபர்கள் விளக்கம் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். 316

# புதிதாக நியமமனம் பெற்ற மாகாண பிரதம செயலருடன் கலந்துரையாடல்

(ஹஸ்பர்)





கிழக்கு மாகாணத்தின் புதிய பிரதம செயலாளர் டி.ஏ.சி.என். தலங்கமவை, மாகாண அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிமுகம் செய்து, அவர்களுடனான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், பிரதம செயலாளர் மாகாண அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு உரையாற்றினார்.

அவர், அனைத்து நிறுவனங்களின் ஊழியர்களும் தலைவர்களும் பொது நிதியை முறையாகப் பயன்படுத்தி, பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நிறுவன மட்டத்தில் உற்பத்தித்திறன் உயர்வாக செயல்படுவதற்கும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்று கூறினார்.

மேலும், பொது நிதியில் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் விடப்பட்டுள்ள கட்டடங்கள் உள்ளிட்ட சொத்துக்களை விரைவாகப் பயன்படுத்துதல் தொடர்பிலும் கலந்துரையாடல் நடந்தது.



# ‘கழுதை மனிதன்’ சிறுகதைத் தொகுதி வெளியீடு



சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரும் எழுத்தாளருமான அஷ்ரஃப்சிஹாப்தீன் மொழி பெயர்த்த ’கழுதை மனிதன்’ சிறுகதைத் தொகுதி வெளியீடும் இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் மாணாக்கருக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பி.ப. 4.00 மணிக்கு தெமட்கொட வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரபல எழுத்தாளர் கவிஞர் அல் அஸூமதின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன் அவர்கள் பிரதம அதிதியாகவும் மையோண் நிறுவனப் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா சிறப்பதிதியாகவும் கலந்து கொள்வார்கள். நூலின் முதற்பிரதியை யுனிவர்ஸல் ட்ரவல் கன்ஸல்டன்ஸி -அஜ்மா நிறுவனக் குழுமப் பணிப்பாளர் அக்கீல் ஜுனைட் பெற்றுக்கொள்வார். இவர்களுடன் கௌரவ அதிதிகளாகவும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் நயவுரைகளை எழுத்தாளர்களும் மொழிபெயர்ப்பாளர்களுமான ஜிப்ரி ஹஸன் அவர்களும் ஹேமச்சந்திர பத்திரண நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் வாசகனின் வாசகங்கள் என்ற தலைப்பில் பேருவளைப் பிராந்திய எழுத்தாளர் ஒன்றியத் தலைவர் ரபீஸ் ஹம்ஸாவும் மொழிபெயர்ப்பும் மறுபடைப்பே என்ற தலைப்பில் கவிஞரும் பேச்சாளருமான தமிழ்த் தென்றல் எஸ்.எம். அலி அக்பர் அவர்களும் உரையாற்றவுள்ளனர்.

மாணாக்கருக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கும் ஏற்பாட்டினையும் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளையும் இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார் மேற்கொண்டு வருகிறார். நிகழ்ச்சிகளை ஆதவன் வானொலி அறிவிப்பாளர் முஸ்னி முர்ஷித் தொகுத்து வழங்குவார்.

# வவுனியாவில் ஓட்டோவின் மேலதிக பாகங்களுக்கு தண்டப்பணம் விதித்த போக்குவரத்து பொலிஸார்

## உடைத்து வீசிய சாரதி

வவுனியாவில் க்ளீன் சிறிலங்கா திட்டத்தில் ஓட்டோ சாரதிக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டதால், அதிருப்தியடைந்த ஓட்டோ சாரதி தனது வாகனத்தின் மேலதிக பாகங்களை தனது காலால் உதைந்து உடைத்து எறிந்த சம்பவம் ஒன்று வவுனியாவில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இலங்கை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள ’கிளீன் சிறீலங்கா’ திட்டத்தின் ஓர் அங்கமாக ஓட்டோ - பஸ் உள்ளிட்ட வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மேலதிக பாகங்களை அப்புறப்படுத்துமாறு பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், அவற்றை அகற்றுவதற்கு கால அவகாசமும் வழங்கியிருந்தனர்.

அந்தவகையில், வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் கிளீன் சிறீலங்கா திட்டத்தை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, அப்பகுதியினூடாக பயணித்த ஓட்டோ ஒன்றை வழிமறித்த பொலிஸார் ஓட்டோவில் பொருத்தப்பட்டிருந்த மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுமாறு தெரிவித்திருந்துடன், தண்ட குற்றப் பத்திரத்தையும் வழங்கியிருந்தனர்.

இதனால் அதிருப்தி அடைந்த ஓட்டோவில் சாரதி பொலிஸாரின் முன்னிலையிலேயே குறித்த உதிரிப்பாகங்களை காலால் அடித்து உடைத்திருந்ததுடன், ஏனைய பாகங்களையும் கழற்றி வீசிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

சாரதியின் செயற்பாட்டை வேடிக்கை பார்த்த பொலிஸார் அமைதியாக அங்கிருந்து சென்றிருந்தனர். 100

# மாணவருக்குக் கற்றல் உபகரணங்கள்



(சர்ஜுன் லாபீர்)

ஓரங்கட்டப்பட்ட நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் ஓஎண்ஆர் நிறுவனத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி பங்களிப்பில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 07 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 110 ஏழை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கும் ஆரம்ப நிகழ்வு வெள்ளிக்கிழமை சம்மாந்துறைமலையடிக்கிராமம் அஸ் ஸமா வித்தியாலயத்தில் பாடசாலைஅதிபர்எம்.ஆூவக்கர் தலைமையில் இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்திஉத்தியோகத்தர்எம்.ஏ வாஜீத்அலியின்ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே குறைசா, கிராம சேவகர் எப் சிஹ்னாஸ் பானு, பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உட்பட பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# உன்னிச்சையில் பொங்கல் விழா

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பொங்கல் விழா உன்னிச்சை 8ஆம் கட்டை பாடசாலை மைதானத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையில்இருந்துஊர்வலம்ஆரம்பாகி உன்னிச்சைக்குளம் வரை சென்று அங்கிருந்து பாடசாலை மைதானத்தை வந்தடைந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

ஊர்வலத்தில் தமிழர் பாரம்பரிய நடனங்கள் மாணவர்களால் நிகழ்த்துகை செய்யப்பட்டன. மேலும் மாட்டுவண்டி மற்றும் உழவு இயந்திரங்களும் ஊர்வலத்தில் ஈடுபட்டன. உழவு இயந்திரங்களில் கோட்டை, முக்காலி, சூடு போன்றனவும், உழவுக்காகபயன்படுத்தப்படும் கலப்பைகளும் காட்சிப்பொருள்களாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

புதிதெடுத்தல், அவற்றினை நெல்லாக்குதல், நெல்லினை அரிசியாக்குதல், அவற்றினைக் கொண்டு பொங்கல் பொங்குதல் போன்ற பாரம்பரியமான செயற்பாடுகளும் நடைபெற்றன.

மேலும், தமிழர்கள் பாரம்பரியமாக பயன்படுத்திய பொருள்களும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

பொங்கல் பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டு, பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன. மேலும் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வலயக்கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பிரதம அதிதியாக ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் க.சத்தியநாதன், சிறப்பு அதிதியாக கூத்துக்கலைஞர் மு.கார்த்திகேசு, கௌரவ அதிதிகளாக இவ்வருடம் ஓய்வுபெறவுள்ள அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், வலய பதவிநிலை உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, வலயத்தில் கடமையாற்றும் இவ்வருடம் ஓய்வுபெறவுள்ள அதிபர்களும், சிறப்பு அதிதியும், பிரதம அதிதியும் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வினை வலயக்கல்வி அலுவலகத்துடன் இணைந்து உன்னிச்சை 8 ஆம் கட்டை பாடசாலை சமூகமும் இணைந்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வலயமட்ட பொங்கல் விழா எல்லைப்புறத்தில் உள்ள பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.







# சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு சம்மாந்துறையில் சுகாதார விழிப்புணர்வு

(பாறுக் ஷிஹான்)

வட்டிலப்பம், மிக்சர் உற்பத்தி போன்ற சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு சுகாதார நடைமுறை மற்றும்

உணவுச் சட்டம், சுட்டுத் துண்டிடல், போன்றன தொடர்பாகவும், பிளாஸ்டிக்பாவணையின் பாதிப்புதொடர்பாகவும் விழிப்புணர்வு நிகழ்வு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.





மேற்படி நிகழ்வானது சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேலும் பிரதேச செயலக பங்களிப்புடன் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் நடைபெற்றதுடன் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிரதேச செயலக சிறுகைத் தொழில் பிரிவு அலுவலர்களும் பங்குகொண்டனர்.

# பதுக்கிய அரிசியைக் கண்டுபிடிக்க 2 ஆயிரம் சுற்றிவளைப்புக்களாம்

## நுகர்வோர் அதிகார சபை கூறுகிறது

நுகர்வோர் விவகார அதிகாரசபை இதுவரை அரிசி தொடர்பாக 2,000க்கும் மேற்பட்ட சுற்றிவளைப்புக்களை நடத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்களைக் கண்டறிய வார இறுதி நாட்களிலும், இரவு நேரங்களிலும் தற்போது சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரசபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார்.

அதன்படி, நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் நேற்று கொழும்பின் புறக்கோட்டைப் பகுதியில் பல சோதனைகளை முன்னெடுத்ததுடன், அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக பல விசேட நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இதன்போது, மொத்த அரிசி விற்பனைக் கடைகள் நுகர்வோர் அதிகாரிகளின் உளவாளிகளால் சோதனை செய்யப்பட்டதுடன், அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் கடைகளின் உரிமையாளர்கள் மீது சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையை மீறுதல் மற்றும் விலையை காட்சிப்படுத்தாததற்காக வழக்குகளைத் தாக்கல் செய்ய அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்ததாக நீதிமன்றில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால், ஒரு தனிப்பட்ட வணிகத்திற்கு 100,000 ரூபா முதல் 500,000 ரூபா வரையிலும், ஒரு நிறுவனத்திற்கு 500,000 ரூபா முதல் 50 ரூபா இலட்சம் வரையிலும் அபராதம் விதிக்கப்படலாம் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை சுட்டுக்காட்டியுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

## மாகாண.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோரவுள்ளதால் ஆரம்பத்தில் இருந்து தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். தேர்தல்பணிகளுக்குதேவையான நிதி திறைச்சேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே நிதி நெருக்கடி ஏதும் ஏற்படாது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தற்போது அவை விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு திகதியை நிர்ணயிக்க முடியும்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கும், தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கும் போதுமான காலவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் உறுதியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உண்டு என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம். தேர்தல் முறைமை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களில் கலப்புத் தேர்தல் முறைமை குறித்து பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

காலவரையறையின்றிபிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகஉள்ளோம். எதிர்வரும்காலங்களில் அரசியல் கட்சிகளுடன் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம். மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும், பாராளுமன்றத்துக்கும் உண்டு என்றார்.

## யாழ்ப்பாணத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 நாட்கள் 'பாஸ்போர்ட்' பிரச்சினை பற்றிப் பேசினோம், அமைச்சரவையுலும் பேசினோம், நிறுவன பிரதானிகளை அழைத்துப் பேசினோம், கூடுதலாக, நீதித்துறைசெயல்முறைகளைவிரைவுபடுத்த வேண்டியதன்அவசியம்மற்றும்தற்போதைய 'பாஸ்போர்ட்' சிக்கல்களைத் தீர்ப்பது குறித்தும் பேசினோம்.

யாழ்ப்பாணத்தில் புதிய குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்தைத் திறப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த முடிவை செயல்படுத்த தேவையான பணியாளர்களை நியமிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தற்போது, அந்த அமைச்சரவை முடிவு பொது சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது சேவை ஆணைக்குழு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் அதற்கான தீர்மானத்தை எடுக்கும். அந்த முடிவு எடுக்கப்பட்ட பிறகு, இந்த அலுவலகத்தை 24 மணி நேரமும் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

## தையிட்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தையிட்டிவிகாரைவிவகாரம்இன்றுதமிழ் மக்களின் இருப்புக்குச்சவாலாக மாறியுள்ளது. மக்களின் காணி அவர்களுக்கே உரியது. ஆனால், இன்று அது மறுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

நீண்ட காலமாக இரணுவத்தினரது பிடிக்குள் இருந்த எமது மக்களின் காணிகளில் அவர்களுக்குத் தெரியாமலேயே இந்த விகாரை நிர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசினதும் பௌத்த கட்டமைப்பினதும் இந்த அதிகார இறுமாப்பு எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றல்ல. அதனால் குறித்த காணி நிலங்களின் உரிமையாளர்கள் தமக்கான நியாயம் கேட்டு நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். ஆனாலும் அது இதுவரை நிறைவேறாத நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில்ஜனாதிபதி முன்னிலையில் பல முரணான கருத்துக்கள் கூறப்பட்டு திசைதிருப்பும் முயற்சியொன்று உருவாக்கப்பட்ட நிலையில் அதற்குக் கடும் எதிர்ப்பும் காட்டப்பட்டது.

அதேநேரம் இலங்கையின் வேறு சில பகுதிகளில் இந்துக் கோயில்கள் சில இன முரண்பாட்டை உருவாக்கும் என்ற தோரணையில்இடிக்கப்பட்டும்இருக்கின்றன. அதனால் நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பினருக்கும் ஒரே சட்டம் என்றுகூறும் இந்த அரசு இந்த விகாரையையும் இன முரண்பாட்டை உருவாக்கும் ஒன்றாகக் கருதி இடிப்பது அவசியம்.

அத்தோடுவிகாரையின்சுற்றுப்புறத்திலுள்ள வேறு சில மக்களின் காணி நிலங்களும் சட்டவிரோதமாகப் பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்தபகுதிமக்கள்பெப்ரவரி 12 பெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப் பல்சார் தரப்பினரிடமும் ஆதரவைக் கோரியுள்ளனர். மக்களின் உணர்வுகளுக்கு வலுச்சேர்க்க குறித்த போராட்டத்துக்கு எமது ஆதரவை நாம் வழங்கவுள்ளோம் - என்றார்.

## ஏறாவூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி முறையிட நான் பொலிஸ் நிலையத்துக்கு சென்று வாகனத்தைவிட்டு இறங்கி உள்ள சென்ற போது, பின்னால் வந்த காதர் என்மீது மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தால் தாக்கினார், பொலிஸ் நிலையத்துக்குள்ளும் தாக்க முற்பட்டபோது பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர் என்றார்.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பாக கருத்துத்தெரிவித்த பொலிஸார், நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்படவில்லை இருவரும் முரண்பட்டு கொண்டனர் என்பதே உண்மை என்று தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## 300 கோடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தலைவர்கள் ஒப்புக்கொண்டனர் என்று இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

கொழும்பில் சனிக்கிழமை இடம்பெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகள் வர்த்தகம், முதலீடு, அபிவிருத்தி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், பாதுகாப்பு, விவசாயம், உணவுப் பாதுகாப்பு, மக்களிடையே தொடர்பு, அறிவியல், தொழில்நுட்பம்மற்றும்இணைப்பு உள்ளிட்ட துறைகளில் கூட்டு ஒத்துழைப்பு நோக்கங்களை ஆராய்ந்து வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் இந்தியா வேகமாக டிஜிட்டல் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.

டிஜிட்டல் மயமாக்கலை இணைப்புக்கான வழிமுறையாக மட்டுமல்லாமல் - சமத்துவம் மற்றும்வாய்ப்புக்கான ஊடகமாகவும் இந்தியா ஏற்றுக்கொண்டது. அதுவே எமது டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பின் சாராம்சமாகும்.

இந்தியா இன்று அதன் 1.3 பில்லியன் மக்களுக்கு டிஜிட்டல் அட்டைகளை வழங்கியுள்ளது. எம்மத்தியில் 1.2 பில்லியன் நவீன கையடக்க தொலைபேசி பயனர்கள், 950 மில்லியன் இணைய பயனர்கள் உள்ளனர்.

உலகின்நிகழ்நேரடிஜிட்டல்பரிவர்த்தனைகளில் 40 சதவீதம் இந்தியாவில்நடைபெறுகிறது. கடந்தபத்தாண்டுகளில், பூமிக்கும்சந்திரனுக்கும் இடையிலான தூரத்தைவிட எட்டு மடங்கு அதிகமான ஒப்டிகல் பைபர்களை இந்தியா அமைத்துள்ளது.

அந்த வகையில் முழுப் பிராந்தியத்துக்கும் வாய்ப்புகள் மற்றும் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான விரைவான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சமீபத்திய இந்தியப் பயணமானது இந்த மிக முக்கியமான ஒத்துழைப்புத் தூணான மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் மயமாக்கலுக்கு மேலும் உத்வேகத்தை அளித்தது.

இந்திய உதவியுடன் 300 கோடி ரூபா மதிப்பிலான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்துவதை விரைவுபடுத்த இலங்கை தலைவர்கள் ஒப்புக்கொண்டனர். டிஜிட்டல் பொருளாதாரம் குறித்த கூட்டுப்பணிக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் டிஜிலொக்கரை செயல்படுத்துவது குறித்த தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான கட்டணங்களை எளிதாக்குவதற்காக கடந்த ஆண்டு இலங்கையில் யு.பி.ஐ. கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இரு நாடுகளின் நலனுக்காக யு.பி.ஐ. டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பயன்பாட்டை விரிவுபடுத்துவது குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எமது ஒவ்வொரு நாடுகளின் டிஜிட்டல் பயணங்களுக்கும் உத்வேகமளிக்கவும், பிம்ஸ்டெக் பிராந்தியத்துக்கான முன்னேற்றத்துக்கான புதிய பாதைகளை மேலும் திறக்கவும் இந்த தளத்தைப் பயன்படுத்துவோம் என்று நம்புகின்றோம் என்றார்.

## வெளிநாட்டுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை அதிகாரிகள் இருக்கும்போது, இராஜதந்திர சேவைக்கு அரசியல் ரீதியான நியமனங்கள் வழங்கப்படுவதை கண்டித்து இலங்கை வெளியுறவு சேவை சங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு சேவையாளர் சங்கம் என்பது நாட்டின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்த சிறப்புப் பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் கொண்ட ஒரு சேவை என்பதை அந்த அறிக்கை நினைவு கூர்ந்தது.

இதேவேளை, தொழில்முறை வெளியுறவு சேவை அதிகாரிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அரசியல் நியமனங்களை மேற்கொள்வதன் மூலம் இராஜதந்திர சேவை குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தூதரகங்களுக்கு அரசியல் நியமனங்களை மேற்கொள்வது, தேர்தலின் போது அரசாங்கம் முன்வைத்த கொள்கை அறிக்கைக்கு முரணானது என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலின் போது அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கை அறிக்கையில், தொழில் இராஜதந்திரிகளின் தொழில்முறை சிறப்பை அடிப்படையாகக் கொண்ட புள்ளிகள் முறையின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளதாகவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இராஜதந்திர சேவைக்கான அரசியல் நியமனங்கள்தொடர்பானகலந்துரையாடலை நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கமற்றும்வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரிடம்பலசந்தர்ப்பங்களில்கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இன்றுவரை அத்தகைய கலந்துரையாடலை நடத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லைதென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# கிண்ணியா நகரத்தில் சதொச திறந்து வைப்பு

(இம்றான்)

கிண்ணியா நகரப் பகுதியில் புஹாரி சந்திக்கு அருகில் சதொச திறந்து வைக்கப்பட்டது.

இதில் கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் நகரசபை செயலாளரும் கலந்து கொண்டு சிறப்பாக சதொசவைத் திறந்து வைத்தனர்.

இதன் மூலம் மக்கள் ஏனைய கடைகளை விட குறைந்த விலையில் பொருள்களை இலாபமாக கொள்வனவு செய்யக் கூடியதாக அமைந்துள்ளது.





# கற்பிட்டி தில்லையூர் தாருல் அர்கம் பள்ளி நிர்வாகத்திடம் கையளிப்பு

(சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் தாருல் அர்கம் பள்ளிவாசல் கற்பிட்டி தனவந்தர் ஒருவரால் புனரமைப்பு செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் முஸ்லிம்கள் தமது இறை கடமைகளை நிறைவேற்றுவதற்காக வெள்ளிக்கிழமை பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

கற்பிட்டி தில்லையூர் தாருல் அர்கம் பள்ளிவாசலின் மேற்பகுதி நீண்ட நாள்களாக சிதைவடைந்து உடைந்து விழும் தருவாயில் காணப்பட்டது. இதன் புனரமைப்பு தொடர்பாக பள்ளிவாசல் நிர்வாகம் முயற்சித்தமைக்கு அமைய கற்பிட்டி நகரில் வசிக்கும் தொழிலதிபர் ஒருவரின் தனி முயற்சியாக தனது பெற்றொர்களின் மறுமை வாழ்வுக்காக அவர்களின் ஞாபகர்த்தமாக மேற்படி தில்லையூர் தாருல் அர்கம் பள்ளிவாசல் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கிழங்குக் கடை, சுவையூட்டி கடைகள் மீது இரவு நேர திடீர் சோதனை நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

சுகாதாரமற்ற கிழக்கு பொரியல் உட்பட டேஸ்ட் கடைகள் தொடர்பில் பொதுமக்களிடம்இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து உணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே . மதன் தலைமையில் சென்ற சுகாதார குழுவினர் வெள்ளிக்கிழமை இரவு திடீர் சோதனைகளை நடத்தினர்.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள் உட்பட டேஸ்ட் கிழங்கு பொரியல் கடைகளின் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும்உணவங்கள்சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள்மற்றும்சமையல்பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டிருந்தனர்.

அதனை ஒட்டியதாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சிரேஸ்ட மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் கடைகள் கிழங்கு பொரியல் தயாரிக்கும் கடைகள் திடீர் பரிசோதனையும் முற்றுகையும் இடம்பெற்றுசாய்ந்தமருதுசுகாதாரவைத்திய அதிகாரியின் அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்களில் மனித நுகர்வுக்கு








பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகளும் வெயிலில் வைக்கப்பட்ட மற்றும் வடிகான்கள் மீது வைக்கப்பட்ட உணவுகள் கைப்பற்றப்பட்டன.

இதன் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற, முறையான களஞ்சிய வசதி இல்லாத மற்றும் பழுதடைந்த உணவுகளை வைத்திருந்தோர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற மற்றும் பழுதடைந்த உணவுகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

அதே போன்று சில உணவகங்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க தேவையான மேலதிக ஒழுங்குகளை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேற்கொண்டுள்ளது.

# சம்மாந்துறையில் பௌஸ்தீனால் ஹஜ்-உம்ரா பற்றி தெளிவூட்டல்

(தில்சாத் பர்வீஸ்)

ஹஜ்-உம்ராபயணங்களைமேற்கொள்ள இருக்கும் ஹாஜிகளுக்கான வழிகாட்டல் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் ஏ.பௌஸ்தீன் (துப்லீகி) அவர்களின் தலைமையில் வெள்ளிக்கிழமை மாலை வேளையில் இடம்பெற்றது.

ஹஜ் - உம்ராவில் நாம் எவ்வாறு திருப்திகரமாக மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக காணொளி மூலம் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது, ஹஜ்-உம்ராபயணங்களை மேற்கொள்ள இருக்கும் ஹாஜிகளினால் பல கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கான பதில்களையும் ஏ.பௌஸ்தீன் (துப்லீகி) வழங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

# வவுனியாவில் பாடசாலை ஒன்றில் உயர்தர மாணவன் மீது தாக்குதல்

## அவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா நகரையண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதில் மாணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா நகரையண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் ஒருவருக்கும், கீழ் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களாக குறித்த முரண்பாடு நீடித்து வந்த நிலையில், கீழ் வகுப்பு மாணவன் வெளி இளைஞர்களை அழைத்துச் சென்று உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் உயர்தர மாணவன் காயமடைந்து வவுனியாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுள்ளனர். இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை எனபதும் குறிப்பிடத்தக்கது. 100

# பொலிஸ் அதிகாரிகள் 166 பேர் இடமாற்றம்

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர மற்றும் கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித்ரோகன ஆகியோர் உட்பட 12சிரேஷ்ட பொலிஸ்அதிகாரிகள் மற்றும் 154 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய, இந்த இடமாற்றங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் செயல்படுத்தப்படவுள்ளது. குறித்த இடமாற்றங்களுக்கு அமைய, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தங்கள் வழமையான பணிகளுக்குத் திரும்ப வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் விபரங்கள் பின்வருமாறு,

வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றி வந்த டபிள்யூ.கே.ஜயலத் தென்மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபராக பணியாற்றிய கே.ஏ.ரோஹன வடமேல் மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரப்படையின் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய பிரதிப்பொலிஸ் மா அதிபர் டபிள்யு.எஸ்.ஈ.ஜயசுந்தர கிழக்கு மாகாணத்துக்குபொறுப்பானபிரதிப்பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நாட்டில் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் தடுக்கும் வகையில் சிறப்பாக செயற்பட்ட உயர் அதிகாரியாவார்.

மேலும் அவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியாக இருந்த 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அந்தப்பிரிவினால் 357 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் 155 கிலோ ஐஸ்போதைப்பொருள் 6463 கிலோ கேரள கஞ்சா மற்றும் 2866 கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபராககடமையாற்றிய பிரதிப்பொலிஸ் மா அதிபர் டி.ஜி.எஸ்.டி சில்வா பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளைத்தளபதியாக பணியாற்றவுள்ளார்.

தென்மாகாணத்துக்கு பொறுப்பாக பிரதிப்பொலிஸ்மா அதிபராகபணியாற்றிவந்த பிரதிப்பொலிஸ் மா அதிபர் எஸ்.டபிள்யு.எம். சேனாரத்ன ஊவா மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தென்மாகாணத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்களை தடுக்க சிறப்பாக செயற்ப்பட்ட அதிகாரியாவார். ஊவா மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய பிரதிப்பொலிஸ் மா அதிபர் யு.ஜி.ஏ.கே.பீ கருணாரத்ன விசேட பாதுகாப்பு பிரிவுக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபராக கடமையாற்றவுள்ளார்.

இதனிடையே வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்துக்குபொறுப்பானபிரதிப்பொலிஸ் மாஅதிபராககடமையாற்றிக்கொண்டிருக்கும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் எஸ்.டி.விஜேசேகர அதற்கு மேலதிகமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மாஅதிபராகவும் செயற்படவுள்ளார்.



## கல்முனை உப பிரதேச செயலக விவகாரம்;

# பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவுடன் எம்.பியிடம் நஸீர் ஹாஜி முறையிட்டார்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸவுடன் கல்முனையைச் சேர்ந்த பிரபல சமூக செயற்பாட்டாளர் ஏ எம் நஸீர் ஹாஜி முக்கிய சந்திப்பு ஒன்றில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பு வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதுடன்கல்முனையில்ஊறிப்போயுள்ள இனவாதம், பிரதேசவாதம் மற்றும் கல்முனை உப பிரதேச செயலக விடயமாக கலந்து பேசிய பின் அதுவிடயமாக ஓர் அறிக்கையையும் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவிடம் நஸீர் ஹாஜி சமர்ப்பித்துள்ளார் .

மேலும் கல்முனை உப பிரதேச செயலக பிரச்சினை என்பது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி தமிழ்த் தேசியகூட்டமைப்பு அரசியல்வாதிகளின் தேர்தல்கால உண்டியல், அதை பிச்சைக்காரன் புண்ணாக வைத்திருக்கவே அவர்கள் விரும்புகிறார்கள்.

முன்புநாடாளுமன்றில் கோடீஸ்வரன் எம்.பி ,முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் எச.எம்.எம். ஹரீஸ், ஆகியோர் இரு கை ஓசையாக மக்களை உசுப்பேத்தினார்கள். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் மட்டும் ஒருகையால் ஓசையின்றி கோசமிடுகின்றார். ஆதலால் அடுத்த பொதுத்தேர்தலுக்கு முன் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறும் இதன்போது பிரதி அமைச்சரை கேட்டுக் கொண்டார்.



இவரது இந்தக் கோரிக்கை பிரதி அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார் என சமூக ஆர்வலர் கல்முனை சேர்ந்த ஏ எம் நசீர் ஹாஜி தெரிவித்துள்ளார்.

# விசேட அதிரடி படையினரால் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபலபாடசாலைக்கு பின்பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் வெள்ளிக்கிழமை இரவு 07.30 மணியளவில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன்சந்தேகநபர்ஒருவரை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

புளக் ஜே கிழக்கு 03, சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காகசம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.பி.ஏ. தில்சான், சார்ஜன் அஜித், சார்ஜன் குமார, விசேட அதிரடிப் படை பொலிஸ் உத்தியோகத்தர்களான மதுசான், ஜயதிர, தரங்க உள்ளிட்ட அதிகாரிகள் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2025இல் வெளியிடப்பெற்றது